விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 119 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 04 வியாழக்கிழமை (17.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### பிள்ளையானின் வழக்கறிஞராக கம்மன்பில
## கடந்த காலங்களில் கொலைகள், மோசடிகள் எவ்வளவு தீவிரமானவை என்பது தெளிவாகின்றது
### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கண்டி)

பிள்ளையானின் வழக்கறிஞராக கம்மன்பில நியமிக்கப்பட்டதன் மூலம், கடந்த காலங்களில் நடந்த கொலைகள், மோசடிகள், ஊழல்கள் எவ்வளவு தீவிரமானவை என்பது தெளிவாகிறதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி அநுர குமார இன்று யாழ்.விஜயம்
### பாதுகாப்பு அதிகரிப்பு



(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசாரத்துக்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்.

15ஆம் பக்கம் பார்க்க

# புலிகளைத் தோற்கடிக்க உதவியதற்குத் தண்டனையா?
## சிறையில் கண்ணீர் விட்டு அழுத பிள்ளையான் முன்னாள் எம்.பி உதய கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

உயிரைப் பணயம் வைத்து விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க உதவியதற்காக தனக்கு தண்டனை விதிக்கப்படுகிறதா? என சிறையில் பிள்ளையான் கண்ணீர் விட்டு அழுததாகப் பிள்ளையானின் சட்டத்தரணியும் முன்னாள் எம்.பியுமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் திகதியில் மாற்றம் கிடையாது
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு எதிர்வரும் வாரம் திட்டமிட்ட வகையில் நடத்தப்படும். தேர்தல் திகதியில் எவ்வித மாற்றமும் கிடையாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகள் குறித்து வின

15ஆம் பக்கம் பார்க்க

### வவுனியா பாவற்குளத்தில்
## இரத்தக் கறைகளுடன் இளைஞனின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா, பாவற்குளத்தின் சூடுவெந்தபுலவு அலை கரைப் பகுதியில் இருந்து இரத்தக் கறைகளுடன் இளைஞனின் சடலம் ஒன்றை உளுக்குளம் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞர் வவுனியா விநாயகபுரத்தைச் சேர்ந்த 33 வயதுடைய

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களின் புராதன இடங்களை ஜனாதிபதி விடுவிக்க வேண்டும்
### கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி, கீரிமலை சடையம்மா மடம் ஆதிசிவன் கோவிலிருந்த நிலம், காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல் பாவனையிலுள்ள சுக்கிரவார சத்திர மடத்து நிலம் என்பவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பௌத்த அடையாளங்கள் வட மாகாணத்தில் அழிப்பு
### சரத் வீரசேகர குற்றச்சாட்டு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த சின்னங்களை தமிழ்ப் பிரிவினைவாத அரசியல்வாதிகள் அழித்து வருகின்றனர் என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### அநுர அரசாங்கத்துக்கு
## பொய் சொல்லவும் ஏமாற்றவுமே தெரியும்
### எதிர்க்கட்சித் தலைவர்



(பொத்துவில்)

அநுர அரசாங்கத்துக்கு பொய் செல்லவும் ஏமாற்றவுமே தெரியும் என எதிர்க்

15ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சியில்
## 85 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் 85 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 19.03.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த

## அமரர் நடராசா யாழினி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 17.04.2025 வியாழக்கிழமை காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் இடம்பெற்று அஸ்தி கரைக்கப்படும்.
நாளை 18.04.2025 வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

"ஈஸ்வரம்ஸ்"
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-2722)

# கண்ணீர் அஞ்சலி

## இரத்தினம் பாலகுமார்




இணுவில் மேற்கு ஞானவைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **இரத்தினம் பாலகுமார்** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செட்டி வீதி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

முருகையா குடும்பம்,
இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை
யாழ்ப்பாணம், இலங்கை.

(C-2731)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1951 - 07 - 22 | 2025 - 04 - 16 |

## செல்லையா பத்மநாதன்

பரந்தனைப் பிறப்பிடமாகவும் இந்திரம்மன் கோவிலடி துன்னாலையை வசிப்பிடமாகவும் திக்கத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பத்மநாதன் அவர்கள் நேற்று 16.04.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - ஜானகிஅம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி - நாகரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் புவனேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் பிரசாந்தி, பிரசன்னா(முகாமைத்துவ உதவியாளர் - நீதிமன்றம் பருத்தித்துறை), பிரசாந்த்(ஜேர்மனி) மற்றும் கௌசிகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மணிவண்ணன், சுகன்யா, சுபகலா மற்றும் தரணியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இராசேந்திரன், இராஜேஸ்வரி, அமரர் பாலசரஸ்வதி மற்றும் ஜெகதீஸ்வரி, அமரர் விஜயராணி மற்றும் வத்சலாதேவி, மகேந்திரன் (ராசப்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அபிசாந், சோதிக்ஷா, யஸ்மணி, யதுஸ்கன், டிகோசன், பவிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.04.2025 வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் திக்கத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இந்திரம்மன் கோவிலடி வீதியூடாக தகனக்கிரியைக்காக கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :


சத்திரந்தை,
அல்வாய் வடக்கு,
திக்கம்.

கௌசிகன் : +94 77 809 5506 (மகன்)
பிரசன்னா : + 94 75 822 6713(மகள்)
பிரசாந்த் : + 49 175 160 6904(மகன்)

குடும்பத்தினர்

(C-2732)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.03.1947 — மறைவு 28.04.2024

## அமரர் புதியார் நாகமுத்து

(ஓய்வுநிலை சிறாப்பர், காங்கேசன்துறை சீமெந்துக்கூட்டுத்தாபனம்)

**நிமிர்ந்த நடை**
**நேர்கொண்ட பார்வை**
**தர்மத்தின் வழி செல்லும் திடம்**
**காணக்கிடைக்காத உங்கள் அன்பை**
**எப்போது காண்போம் அப்பா!**

பாடசாலை வளவு,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

உங்கள் நினைவுகளுடன்..
குடும்பத்தினர்
077 844 9151

(C-2723)

# 1 ஆம் ஆண்டு சிரார்த்த தினம்



கடந்த 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் வைத்தீஸ்வரன் ரஞ்சிதமலர்

அவர்களின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி இன்று 17.04.2025 வியாழக்கிழமை காலை11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-2727)

உஷா பான்சி கவுஸ்,
[illegible] கோவிலடி,
[illegible] கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்
077 223 6063, 077 219 8378

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளைப் பலப்படுத்த

# ஆளுநர்களின் அதிகாரங்களை குறையுங்கள்

## தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை

**(கொழும்பு)**

**மாகாண சபை முறையைப் பலப்படுத்துவதற்கு ஆளுநர்களின் அதிகாரங்களை குறைத்து மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை அளிப்பது குறித்து ஆராய அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை நியமிக்க வேண்டும் என தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.**

இதுதொடர்பில் "பொருளாதாரத்தை பாதுகாக்கவும் நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் அவசரமான சீர்திருத்தங்கள் தேவை" என்ற தலைப்பில் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படவிருக்கும் வரிகள் தொடர்பாக அமெரிக்க அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு இலங்கைக்கு மூன்று மாத கால அவகாசம் கிடைத்திருக்கிறது. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளங்குவதால் இந்த வரி விதிப்பு அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை தற்போது அனுபவித்துவரும் இலங்கை அதன் ஏற்றுமதி சந்தைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் இதையொத்த சவாலை எதிர் நோக்குகிறது.

அமெரிக்கா, சீனா, ஐரோப்பா அல்லது இந்தியா என்று எந்த முக்கியமான வல்லரசுடனும் ஒத்துழைப்பு உறவுமுறையொன்றைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமானது என்ற யதார்த்த நிலையை ஏற்றுக் கொண்டு வாழ்வதற்கு அரசியல் தலைமைத்துவம் உட்பட இலங்கையர்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை தொடர்ந்து கிடைப்பதற்கு இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை விதந்துரைக்கும் தீர்மானம் ஒன்றை ஐரோப்பிய பாராளுமன்றம் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்றியது என்பதை தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்ட விரும்புகிறது.

1979 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் அடாத்தான கைதுகள், நீண்டகால தடுப்புக்காவல், மட்டப்படுத்தப்பட்ட நீதித்துறை மேற்பார்வை, சந்தேக நபர்கள் பொலிஸாருக்கு அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களை குற்றவாளிகளாக காண்பது ஆகியவற்றுக்கு அனுமதிக்கும் ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதன் காரணத்தினால் பரந்தளவில் மிகவும் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகிவந்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாத தடைச்சட்டம் மிகவும் மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வரலாறு ஒன்று இருக்கிறது.

விசாரணைகளை துரிதப்படுத்தாமல் அரசாங்கங்கள் ஆட்களை நீண்டகாலத்துக்கு தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாத தடைச்சட்டம் அனுமதித்திருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி பயங்கரவாத தடைச் சட்டத்தை ஒழிப்பதாக வாக்குறுதியளித்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான விதப்புரைகளைச் செய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கு நீதியமைச்சர் சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்திருப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய பாராளுமன்றத்தில் செய்த அறிவிப்பை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

அதேவேளை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று கூறியதையும் தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

பயங்கரவாத தடைச்சட்ட விடயத்தில் செய்ததைப் போல மாகாண சபை முறையை வலுப்படுத்துவது குறித்தும் மாகாணங்களின் ஆளுநர்களின் அதிகாரங்களைக் குறைத்து மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை வலுவூட்டும் முகமாக கூடுதல் அதிகாரங்களையும் நிதி வளங்களையும் ஒதுக்கீடு செய்வது குறித்தும் ஆராய்வதற்கு அமைச்சர்கள் மட்டக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதன்மூலமாக பொருளாதாரத்தையும் பரந்தளவில் நாட்டையும் முன்னேற்றுவதில் மனப்பூர்வமாக பங்கேற்கக் கூடியதாக நாட்டு மக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# மூன்று வாகனங்கள் மோதி விபத்து இருவர் பலி, இருவர் படுகாயம்



குருணாகல் - தம்புள்ளை ஏ-6 வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளதாக தொரட்டியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளையிலிருந்து குருணாகல் நோக்கிப்பயணித்த கெப் ரக வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும் பின்புறத்தில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளின் செலுத்துநரும் படுகாயமடைந்துள்ள நிலையில் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் முச்சக்கரவண்டியின் சாரதி மற்றும் பின்புறத்தில் பயணித்த நபரொருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 மற்றும் 43 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த விபத்து தொடர்பில் கெப் ரக வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தொரட்டியாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# தமிழ் மக்களை எம்மிடம் இருந்து பிரிக்கவே முடியாது - விஜித ஹேரத்



(கொழும்பு)

வடக்கு தமிழ்க் கட்சியினர் எம்மை விமர்சிப்பதால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. இந்த விமர்சனங்களால் எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களைத் தமது பக்கம் மீண்டும் இழுக்க தமிழ்க் கட்சியினரால் முடியாது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "வடக்கு தமிழ் மக்கள் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளார்கள்.

இந்நிலையில் அந்த மக்கள், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமது கட்சிக்கு ஆதரவு வழங்குவதைத் தடுக்கும் வகையில் வடக்கு தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் என்று சொல்லப்படுபவர்கள் என்னையும் எனது கட்சியின் உறுப்பினர்களையும் தற்போது விமர்சித்து வருகின்றார்கள்.

இந்த விமர்சனங்களால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களை தமது பக்கம் மீண்டும் இழுக்க அவர்களால் முடியாது.

ஏனெனில் வடக்குத் தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள்.

இந்த மக்களின் அரசியல், பொருளாதார ரீதியிலான கோரிக்கைகளை நாம் நிறைவேற்றுவோம். எம்மை நம்பி வரும் மக்கள் எவரையும் நாம் கைவிட மாட்டோம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-8)

# மதுபோதையில் சாரத்தியம் 800 சாரதிகள் மீது வழக்குப் பதிவு

(கொழும்பு)

கடந்த 2 நாட்களில் மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் 800 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் ஓவரில் டில்லி சுப்பர் வெற்றி ராஜஸ்தானுக்கு ஹட்ரிக் தோல்வி




இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் போட்டி சமன் ஆனதால், சுப்பர் ஓவரில் டில்லி அணி வெற்றி பெற்றது.

பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் 32ஆவது ஆட்டம் நேற்று டில்லி அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் டில்லி - ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய டில்லி அணியில் பிரேசர் மெக்குர்க் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கரண் நாயர் ஓட்டம் ஏதுமின்றி ரன் அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார். கே.எல்.ராகுல், அபிஷேக் போரல் ஜோடி நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

அதிகபட்சமாக அபிஷேக் போரல் 49, ராகுல் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து டிரிஸ்டான் ஸ்டூபர் 34, அக்சர் பட்டேல் 34 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் டில்லி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை குவித்தது. ராஜஸ்தான் அணியில் ஜோப்ரா ஆர்ச்சர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

189 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களம் இறங்கிய ராஜஸ்தான் அணியில் ஆரம்பத்தில் நிதானமாக ஆடி அரைச்சதம் அடித்த யாஷ்வி ஜெய்ஸ்வால் 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சஞ்சு சாம்சன் 31 ஓட்டங்களில் காயமடைந்து (ரிட்டயர்ட் ஹேர்ட்) வெளியேறினார். ரியான் பாரக் 8, நிதீஷ் ராணா 51 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

போட்டியின் 20ஆவது ஓவரில் துருவ் ஜுரல் 25 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரன் அவுட்டானார்.

அதன்போது 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்கள் எடுத்ததால் போட்டி சமன் ஆனது.

### சூப்பர் ஓவர்

இதையடுத்து சூப்பர் ஓவர் வீசப்பட்டது. இதில் ராஜஸ்தான் அணி ஒரு ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்து 11 ஓட்டங்களை எடுத்தது. 12 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாட களமிறங்கிய டில்லி அணி 3 பந்துகளில் 15 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. (ம-7,4)




## புலிகளைத்...

2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பிள்ளையானிடம் தற்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் 90 நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவில் விசாரணை மேற்கொள்கின்றனர்.

தடுப்புக்காவலில் உள்ள சிவநேசதுரை சந்திரகாந்தனைச் சந்தித்த சட்டத்தரணி உதய கம்மன்பில அரை மணி நேரம் கலந்துரையாடியிருந்தார்.

இது தொடர்பில் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் கிழக்கில் நடந்த கடத்தல் வழக்குத் தொடர்பாகவே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அரசாங்கம் கூறுவது போல் 2019 ஈஸ்டர் தாக்குதல்களுடன் பிள்ளையானுக்குத் தொடர்பில்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கையொப்பமிட்ட உத்தரவு, ஒரு நபரைக் கடத்துவதற்கு உதவுவது மற்றும் உடந்தையாக இருப்பது தொடர்பான சட்டவிரோத நடவடிக்கை தொடர்பானது என்று பிள்ளையானின் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிள்ளையானின் கைது மற்றும் தடுப்புக்காவல் ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடையது என்று உத்தரவில் எந்தவகையிலும் கூறப்படவில்லை.

2015 முதல் 2020 வரை பிள்ளையான் தடுத்து வைக்கப்பட்டிருந்ததால், ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் அவருக்குத் தெரிந்திருக்க முடியாது.

ஆகவே, ஈஸ்டர் தாக்குதல்களின் மூளையாக பிள்ளையான் இருப்பதாக யாராவது சொன்னால் அது ஒரு நகைச்சுவை. ஏப்ரல் 10ஆம் திகதி பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில், ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விபரங்களை பிள்ளையான் வெளிப்படுத்தியதாகக் கூறினார். ஏப்ரல் 12 ஆம் திகதி மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவர் ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டதாக ஜனாதிபதி கூறினார். இருப்பினும் ஏப்ரல் 13ஆம் திகதி நான் பிள்ளையானைச் சந்தித்தபோது அரசாங்கம் கூறுவதுபோல் தாக்குதல்கள் குறித்து இந்த நபர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது என்று உதய கம்மன்பில கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்களுக்கு முன்னும் பின்னும் பிள்ளையான் தடுப்புக் காவலில் இருந்ததால், ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து அவருக்குத் தெரிந்திருக்க வழி இல்லை என்பது தெளிவாகிறது.

2025 ஏப்ரல் 09 அன்று பிள்ளையானைச் சந்திக்க முயன்றபோது, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (CID) பிள்ளையானை அணுக அனுமதி மறுத்ததாக நண்பரான அவரது சட்டத்தரணி தனக்குத் தெரிவித்ததாக உதய கம்மன்பில கூறினார்.

இதன் பிறகு, நான் பிள்ளையானின் குடும்பத்தினரைச் சந்தித்து தேவையான விபரங்களைப் பெற்றேன். பின்னர் நான் சிஐடியின் பணிப்பாளர் நாயகத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, பிள்ளையானின் குடும்பத்தினரும் சட்டத்தரணிகளும் அவரை அணுக மறுக்கப்பட்டுள்ளதாகவும், இது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (பி.டி.ஏ) மீறல் என்றும் தெரிவித்தேன். நான் இப்போது பிள்ளையானின் சட்டத்தரணியாக இருப்பதால், அவரைச் சந்திக்க வேண்டியிருப்பதால், எனக்கு அனுமதி வழங்கப்படுமா? என்று கேட்டேன்.

எழுத்துபூர்வமாக கோரிக்கை விடுக்குமாறு சிஐடி பணிப்பாளர் நாயகத்தால் தெரிவிக்கப்பட்டு, அவ்வாறு செய்யப்பட்டதை அடுத்து, பிள்ளையானைச் சந்திக்க தனக்கு அனுமதி வழங்கப்பட்டதாகக் கம்மன்பில கூறினார்.

இருப்பினும், எங்கள் சந்திப்பின் போது நான்கு பொலிஸ் அதிகாரிகள் உடனிருந்தனர், இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வழக்கமான ஒரு நடைமுறை அல்ல.

ஒரு சட்டத்தரணிக்கும் அவரது பொறுப்பில் உள்ள வாடிக்கையாளருக்கும் இடையிலான சந்திப்பு இரகசியமாக இருக்க வேண்டும். ஆனால், எங்களை தனியாக விட்டுவிடுமாறு பொலிஸ் அதிகாரிகளிடம் கோரிய போதிலும், அவர்கள் கோரிக்கையை நிராகரித்து எங்கள் சந்திப்பின்போது உடனிருந்தனர் என்று கம்மன்பில கூறினார்.

உயிரைப் பணயம் வைத்து விடுதலைப் புலிகளை தோற்கடிக்க உதவியதற்காக தனக்குத் தண்டனை விதிக் கப்படுகிறதா? என்றும், இன்னும் எத்தனை ஆண்டுகள் தான் தடுத்து வைக்கப்படப் போகிறார் என்றும் கேள்வி எழுப்பி, பிள்ளையான் கண்ணீர் விட்டு அழுததாகவும் உதய கம்மன்பில கூறினார். (ம-7,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரச கட்டமைப்புக்குள் தீர்வில்லை

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டு

(லண்டன்)

**இன அழிப்பு தந்த வேதனையின் வடுக்கள் தமிழ் மக்களின் மனங்களில் இன்னமும் நிலைத்து இருக்கின்றன. இத்தகைய ஒரு சூழலில், சிறிலங்கா இராணுவமும் இந்திய இராணுவமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டமை உலகமெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றது என்பதனை இந்திய பிரதமருக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வரலாறு சொல்லுகின்ற உண்மைகளை புறம்தள்ளி விட்டு அரசியலை நாம் மதிப்பீடு செய்ய முடியாது. இலங்கைத்தீவில், சிறிலங்கா அரசு ஒரு சிங்கள மேலாதிக்க, இனவாத அரசாக இருக்கின்ற ஒரு நிலையும் இலங்கையின் ஜனநாயகம் என்பது, இன நாயகமாக இயங்குகின்ற நிலையும் உலகம் அறிந்ததொன்று.

இதனால் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால், தமிழ் மக்களுடைய தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குரிய ஒரு அரசியல் சமூகமோ, தீர்வு காண்பதற்குரிய ஒரு அரசியல் விருப்போ தென்னிலங்கையில் இருப்பதாக வரலாறு நமக்கு காட்டவில்லை. தற்போதைய நிலையும் அவ்வாறுதான் இருக்கின்றது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை என ஒன்று இருப்பதைக்கூட இது வரை அங்கீகரிக்கவில்லை. இப்படியான ஒருசூழலில், தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினைக்கு சிறிலங்காவின் அரசகட்டமைப்புக்குள் தீர்வைக் காண்பது என்று எதிர்பார்ப்பது அர்த்தம் அற்றது.

இந் நிலையில் இந்திய அரசு சிறிலங்கா அரசிடம் வேண்டுகோள் விடுப்பது எந்தவிதமான மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை.

இந்த விடயங்களை நாம் சுட்டிக் காட்டுகின்ற அதேவேளை தமிழ் மக்களுடைய தேசிய இன உரிமைகளை தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், ஒரு தேசம் என்பதனையும் தமிழ் மக்களுக்கு வடகிழக்கும் அதை அண்டிய கடலும் பாரம்பரியமாக தாயகமாக உள்ளது என்பதனையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து அதன் அடிப்படையில் இந்திய - ஈழ உறவைக் கட்டியெழுப்ப இந்திய அரசு முன்வர வேண்டும் என நாம் வேண்டுகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# உள்ளூராட்சி சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும்

## இளங்குமரன் எம்.பி

(சாவகச்சேரி)

வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் பட்சத்தில் போலித் தமிழ்த்தேசியவாதிகளுடைய இருப்பு இல்லாமல் போகும் என பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நேற்று புதன்கிழமை சாவகச்சேரியில் அமைந்துள்ள தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாண மக்களைத் தெளிவுபடுத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வருகிறார்.

எமக்கு எதிரான விமர்சனங்களுக்கும் அவருடைய வருகையின் போது பதில் இருக்கும். அதனூடாக தெளிவு பிறக்கும்.

தேசிய மக்கள் சக்திக்கு பூரண ஆதரவு உள்ளது. நிச்சயமாக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சிமன்றங்களையும் கைப்பற்றுவோம்.



சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை மற்றும் யாழ்.மாநகரசபை ஆகிய சபைகளில் எமக்கு அமோக ஆதரவு உள்ளது. இம்முறை ஒரே திசையில் பயணிக்க மக்கள் தீர்மானித்துவிட்டனர்.

பாராளுமன்ற தேர்தலில் தமிழ்க்கட்சிகள் தோல்வியடைந்ததன் பின் ஒன்றிணைவார்கள் என எதிர்பார்த்தேன். ஆனால் அது நடக்கவில்லை. ஆனால் அவர்கள் தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்கும் சுயநோக்கிற்காக ஒன்றுபடுகின்றனர்.

தாம் வெல்வதனைக் காட்டிலும் தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்க வேண்டும் என்பதில் மும்முரமாக இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சி இல்லை. இது ஒரு மனித நேயத்திற்கான அமைப்பு என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-8-30)

# இராசிபலன்

17.04.2025
சித்திரை 04, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 1.16 மணிவரை

கேட்டை பின்னிரவு 5.57 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை

சந்திராஷ்டமம்
கார்த்திகை

வளவன்

**மேஷம்** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**மகரம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** காலைப்பொழுதே கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** வங்கிகளில் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலன் சீராகும், நண்பர்களின் உதவியுண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாடு குதூகலம் தரும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மீனம்** உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

நேருக்கு நேர் பேசாவிட்டால் சிறிய கேள்வியும் விசுவரூபம் எடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS 2025/02

## PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman**, Local Authority Procurement Committee and The **Chairman**, Divisional Procurement Committee on behalf of the Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building and road construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**

4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.

5. Interested bidders may obtain further information from address given below in 6 and **inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.**

| | | **Document Issuing/Purchasing Period** | | | | | From 17.04.2025 until 29.04.2025 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **Pre-Bid Conference** | | | | | At 10.30 A.M on 24.04.2025 | | | |
| | | **Closing and Opening of Bids** | | | | | At 10.30 A.M on 30.04.2025 | | | |
| | | | | | | | | | Required Bid Security | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimatd Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Amount (Rs.) | Validity Period |
| 01 | NP/14/44(04)/Coun/Works/11/2025 | Construction of Shopping Unit at Oddusuddan | Council | 3.81 | 77 | C9 or Above (Building) | 2,000.00 | 17-Jun-2025 | 60,000.00 | 15-Jul-2025 |
| 02 | MA/NP/MU/PTKPS/2025/LAR/01 | Renovation of Periyapuliyankulam School Road | Maintenance | 2.54 | 77 | C9 or Above (Highway) | 2,000.00 | 17-Jun-2025 | 40,000.00 | 15-Jul-2025 |
| 03 | MA/NP/MU/PTKPS/2025/LAR/02 | Renovation of Thileepan Road | Maintenance | 2.54 | 77 | C9 or Above (Highway) | 2,000.00 | 17-Jun-2025 | 40,000.00 | 15-Jul-2025 |
| 04 | PSDG/NP/MU/PTKPS/2025/LAR/02 | Construction of Neththaliyaaru School Road | PSDG | 12.10 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 15-Jul-2025 | 180,000.00 | 12-Aug-2025 |
| 05 | PSDG/NP/MU/PTKPS/2025/OS/01 | Construction of Shopping Unit at Thirumurikandy | PSDG | 3.81 | 77 | C9 or Above (Building) | 2,000.00 | 17-Jun-2025 | 60,000.00 | 15-Jul-2025 |

6. **A complete** set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291023, email: pkips@gmail.com) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.

7. Bids (Original & Duplicate) S/No 01 must be delivered to the Chairman, Local authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu and Bids (Original & Duplicate) S/No from 02 to 05 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu **on or before** 10.30 A.M **as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.

8. Pre-Bid Conference will be held at Conference Hall, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu **commencing at** 10.30 AM **as stated in table above.**

9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Local Authority Procurement Committee & Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road,**
**Puthukkudiyiruppu.**

## விளையாட்டு மைதானத்தை

# எட்டிக்கூடப் பார்க்காத இன்றைய இளம் சமுதாயம்

## கவலை வெளியிட்ட ஆளுநர்

(யாழ்ப்பாணம்)



இளைய சமூகத்தின் மத்தியில் சமூகப்பிறழ்வு அதிகரித்துச் செல்கின்றமைக்கு விளையாட்டுக்களில் பங்கேற்காமை பிரதான காரணமாகும் என வடக்கு மாகாண ஆளுநர் கவலை வெளியிட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகமும் பொது மக்களும் இணைந்து நடத்தும் புதுவருட விளையாட்டு விழா - 2025, இரண்டாம் நாள் நிகழ்வு வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக வடபுல மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய பிள்ளைகள் பாடசாலை முடிந்தவுடன் ஒன்றில் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். இல்லையேல் அலைபேசியுடன் வீட்டில் மூழ்கிக்கிடக்கின்றனர். விளையாட்டு மைதானத்தை எட்டிப் பார்ப்பது அருகி வருகின்றது.

விளையாட்டுக்கள் பொழுதுபோக்குக்கு மாத்திரம் உரியவை அல்ல. அவை எங்களின் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கும் தலைமைத்துவத்தை மேம்படுத்திக்கொள்வதற்கும் பெரிதும் உதவுகின்றன.

சிறந்த விளையாட்டு வீரர்களிடம் மற்றையவர்களை மதிக்கும் பண்புகளையும் காணலாம்.

ஆனால் துரதிஷ்டவசமாக எமது பிரதேசங்களில் விளையாட்டுக்களில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அருகிவருகின்றது.

ஊர்கள்தோறும் விளையாட்டுக்கழகங்கள் உருவாகி இளையோரை அவர்கள் ஈர்த்தால் எதிர்காலத்திலாவது சிறந்த நிலையை அடையமுடியும். என நம்புகின்றேன் என்று ஆளுநர் தனது உரையில் குறிப்பிட்டார். (நி-8)

## ஏழாலை பெரியதம்பிரானின்

# பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பெரியதம்பிரான் ஆலய சித்திரை யாக பெரும் பொங்கல் விழா எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

பொங்கல் விழாவிற்கு முன்னதாக 23 ஆம் திகதி புதன் கிழமை சாடிமனையில் இரவு 7 மணிக்கு மேளக்கச்சேரி ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் மறுநாள் வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் பொங்கல் ஆரம்பமாகி தொடர்ந்து 11 மணியளவில் கொடித்தம்ப பூஜையும் தீ மிதிப்பு வைபவமும் இடம்பெற்று மகேஸ்வர பூஜையும் இடம் பெறும்.

அத்துடன் எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சாடிமனை பூஜை ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு பொங்கல் நிகழ்வு இடம்பெறும் என ஆலய பூசகர்களும் நிர்வாக சபையினரும் தெரிவித்துள்ளனர். (நி-8)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 19 தினங்கள் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவ தினங்களில் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்ற உற்சவம் இடம்பெற்று தொடர்ந்து எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் அதனைத் தொடர்ந்து அன்று மாலை 6.15 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெற்று மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களால் 14 நாட்களில் 37 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் ஏப்ரல் மாதத்தின் கடந்த 14 நாட்களில் வீதி விபத்துக்களால் சுமார் 37 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்துக்களில் 99 பேர் படுகாயமடைந்ததாகவும் 335 பேர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 7 பேர் பலியாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. ( நி-8)

# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி.

## தயாமதி சிவகுமாரன்

(SLTS-I)

**சேவை விபரம்**

- யா/சரசாலை அ.த.க பாடசாலை (17.08.1988– 24.02.1991)
- யா/சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம் (25.02.1991–19.01.1992)
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (20.01.1992–31.12.1993)
- யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம் (01.01.1994–06.01.1994)
- யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் (07.01.1994–01.02.2015)
- யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் (02.02.2015–16.04.2025)

(சி-2719)

Best Wishes

எமது பாடசாலையில் தமிழ்ப்பாட ஆசிரியராகக் கடமையாற்றி இன்று 17.04.2025 வியாழக்கிழமை ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர் திருமதி. தயாமதி சிவகுமாரன் அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகஅமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்– **ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.**

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
12 இல் செவ்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:O/L,driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15330

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்:மகம்
உயரம் :5'3"
தகைமை/தொழில்: A/L,ஜேர்மனி
எதிர்பார்ப்பு-படித்தவர்,PRஉள்ளவர்
தொ.இ: B/15331

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம் :-சுவாதி
2இல் செவ்
கிபா-39
உயரம் :5'5"
தகைமை/தொழில்: A/L,Business
எதிர்பார்ப்பு:படித்தவர்
தொ.இ: B/15332

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு -1994-இந்து
நட்சத்திரம் - மிருகசீரிடம்
கி.பா:21
உயரம் : 5'4'
தகைமை/தொழில்: Dip in IT, Free Lancer
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், சைவ போசனம்
தொ.இ: G/15371

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-திருவோணம்
கி-பா-34
உயரம் : 5'3"
தகைமை/ தொழில்:BSc, Draft sman (pvt)
எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15372

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்: விசாகம் 1 இல் செவ்
கி.பா: 32
உயரம் :5'4"
தகைமை/தொழில்: BSc
எதிர்பார்ப்பு: அரச /தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15375

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 076 097 3120**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## 20, ஐயனார் கோயில் வீதி, வட்டாரம்- 04

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குப்பட்ட வட்டாரம் 04.ஐயனார் கோயில் வீதியில் உள்ள இல: 20 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் ஆறுமுகம் இராசா மகள் ராதா என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குப்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினையும் ஆறுமுகம் பெண் நகுலாம்பிகை ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8430/17.11.1967ஆம் இலக்க உறுதியால் சுப்பிரமணியம் ஆறுமுகம் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

கந்தப்பு நடராசா பெண் அன்னரத்தினம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10687/21.02.1972ஆம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் ஆறுமுகம் ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஒரு பகுதியை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுப்பிரமணியம் ஆறுமுகம் கைம்பெண் நகுலாம்பிகை ஆகியவர் மேற்படி ஆதனத்தினை உள்ளடக்கிய முழுஆதனமும் குறித்த 8430ஆம் இலக்க உறுதியால் தனது கணவராகிய குறித்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆறுமுகம் ஆகியவரால் தனக்கு ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டு விட்டதெனவும், எனினும் குறித்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆறுமுகம் மேற்படி ஆதனத்தினை குறித்த கந்தப்பு நடராசா பெண் அன்னரத்தினத்திற்கு குறித்த 10687ஆம் இலக்க உறுதியால் தவறுதலாக மீளவும் நன்கொடையாக வழங்கியிருந்தார் எனவும், குறித்த நன்கொடை செயலற்றதும், பெலனற்றதும் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4804/07.09.1973ஆம் இலக்க உறுதியால் கந்தப்பு நடராசா பெண் அன்னரத்தினதேவி ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தினை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

இளையதம்பி பவானந்தனும் பெண் சூரியகலாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3882/31.07.2002ஆம் இலக்க உறுதியால் குறித்த கந்தப்பு நடராசாவும் பெண் அன்னரத்தினதேவியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

இளையதம்பி பவானந்தனும் பெண் சூரியகலாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட7441/12.07.2005ஆம் இலக்க உறுதியால் நடராசா நாகராசா ஆகியவருக்கு மேற்படி ஆதனத்தின் ஓர் பகுதியினை நிபந்தனை அறுதியாகக் கட்டுப்படுத்தியிருந்தார்கள். குறித்த நடராசா நாகராசா காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான நாகராசா சுபாஜினியும், நாகராசா ஜனனியும் ஆகியவர்களுக்கு முதுசமாகவும் நாகராசா கைம்பெண் கலாநிதி ஆகியவரை தாரப்பங்காகவும் வந்தடைந்தது.

இளையதம்பி பவானந்தனும் பெண் சூரியகலாவும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 9115/17.10.2007ஆம் இலக்க உறுதியால் குறித்த நாகராசா கைம்பெண் கலாநிதியும், நாகராசா சுபாஜினியும், நாகராசா ஜனனியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை மீளவும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

சின்னத்தம்பி நடராசாவும் பெண் கமலாதேவியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10086/15.09.2009ஆம் இலக்க உறுதியால் குறித்த இளையதம்பி பவானந்தனும் பெண் சூரியகலாவும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தின் ஓர் பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

வேலாயுதம் ஸ்ரீமோகனதாஸ் பெண் விஜிதா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12243/20.03.2012ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னத்தம்பி நடராசாவும் பெண் கமலாதேவியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

கந்தையா விமலானந்தனும் பெண் நவநிதியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு செ.கனகசபாபதி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 422/27.07.2014ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலாயுதம் ஸ்ரீமோகனதாஸ் உம் பெண் விஜிதாவும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

நடராசா கைம்பெண் கமலாதேவி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நிஜந்தா பவானந்தன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 276/31.08.2022ஆம் இலக்க உறுதியால் குறித்த கந்தையா விமலானந்தனும் பெண் நவநிதியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த நடராசா கைம்பெண் கமலாதேவி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நடராசா கைம்பெண் கமலாதேவி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(3956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஈராக்கில் மணல் புயல்
### 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு



(பக்தாத்)

ஈராக்கின் பல நகரங்களில் வீசிய மணல் புயல் காரணமாக சுமார் நாலாயிரத்திற்கும் மேற்பட்டோர் மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக் முழுவதும் வீசிய மணல் புயலையடுத்து ஏற்பட்ட மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்ட பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதனால் பாஸ்ரா மற்றும் நஜாப் ஆகிய விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. (நி-8)

## இஸ்ரேல் நாட்டவருக்கு தடைவிதித்துள்ள மாலைதீவு





(மாலைதீவு)

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மாலைதீவில் இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதை கண்டித்து இஸ்ரேலிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் மாலைதீவிற்குள் நுழைய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பங்களாதேஷ், பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக மாலைதீவும் தங்கள் நாட்டிற்குள் இஸ்ரேலிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் நுழைய தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஆட்டத்தை ஆர

# அமெரிக்க விமா
# அதிரடி தன



(பீஜிங்)

**அமெரிக்காவிடம**
**விமானங்களை வாங்க த**
**நிறுவனங்களுக்கு சீ**
**துள்ளதாக சர்வதேச உ**
**வெளியிட்டுள்ளன.**

அமெரிக்கா மற்றும் சீனா இடையே வர்த்தக யுத்தம் தீவிரமடைந்து வரும் நிலையிலேயே சீனா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கப் பொருட்களின் மீது அதிக இறக்குமதி வரி விதிக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பொருட்களுக்கு அமெரிக்காவிலும் அதே அளவுக்கு பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார். வரி விதிப்புகள் அனைத்திற்கும் 90 நாட்கள் அவகாசம் அளித்துள்ளார்.

அத்துடன், சீனாவில் இருந்து இறக்குதி செய்யப்படும் பொருட்களுக்கு 145 சதவீதம் வரி விதிக்கப்பட்டது. எனினும் சீனா மீதான வரி நடை

முை
தெரி
அ
போர
மிரட்
அமெ
விதித்
இவை
கரித்
இ
தயார
னத்
வாங்

## நீங்க மட்டும் போதும்...
# இந்தியர்களுக்கு விசா சலுகைகளை வாரி வழங்கிய சீனா

(பீஜிங்)

அமெரிக்காவுடன் மோதலுக்கு மத்தியில் இந்தியர்களுக்கு 3 மாதத்தில் 85 ஆயிரம் விசாக்களை வழங்கிய சீனா கட்டுப்பாடுகளை தளர்த்தியது.

இந்தியர்களை ஈர்க்கும் முயற்சியாக, சீனா இந்த தளர்வை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீன தூதர் சூ பீஹோங்கின் தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில் கூறும்போது, "ஏப்ரல் 9 ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள சீன தூதரகங்கள் இந்த ஆண்டு சீனாவுக்குச் செல்லும் இந்திய குடிமக்களுக்கு 85,000 இற்கும் மேற்பட்ட விசாக்களை வழங்கி உள்ளன.

சீனாவைப் பார்வையிடவும், பாதுகாப்பான, துடிப்பான, நேர்மையான மற்றும் நட்பு சீனாவை அனுபவிக்கவும் அதிகமான இந்திய நண்பர்களை நாங்கள் வரவேற்கிறோம்" எனத் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து சீனாவிற்குச் செல்லும் இந்த 85 ஆயிரம் பேரில் பெரும்பாலானோர் மாணவர்கள், வணிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஆவர்.

மேலும் இந்தியர்களுக்கான விசா விதிமுறைகளை சீனா தளர்த்தியுள்ளது. இந்தியர்களை ஈர்க்கும் முயற்சியாக, சீனா இந்தத் தளர்வை அறிவித்



துள்ளது.

அதன்
பதிவுகள
நாட்களில்
நேரடியா
தியர்களு
கப்பட்டு
ணப்பிக்கு
விரைவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ரம்பித்த சீனா!

# மானங்களுக்கு
# டை விதிப்பு!

**டமிருந்து போயிங்**
**ங்க தனது நாட்டு விமான**
**சீனா தடை விதித்**
**கச ஊடகங்கள் செய்தி**




முறையில் இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உடன் வர்த்தகப் போர் முற்றி உள்ள நிலையில், மிரட்டலுக்கு அடிபணியாத சீனா, அமெரிக்கா மீது 125 சதவீத வரி விதித்தது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான வரிப் போரை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் தயாரிக்கப்படும் போயிங் நிறுவனத்திடம் இருந்து விமானங்களை வாங்க வேண்டாம் என தனது நாட்டு விமான நிறுவனங்களுக்கு சீனா உத்தரவிட்டுள்ளது.

மேலும், அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து விமானம் தொடர்பான சாதனங்கள் மற்றும் கருவிகளை வாங்க வேண்டாம் எனவும் உத்தரவிட்டுள்ளது. (நி-8)



ள்ளது.

அதன்படி எந்த ஒன்லைன் முன் திவுகளும் இல்லாமல் வேலை ாட்களில் தங்கள் விண்ணப்பங்களை நேரடியாகச் சமர்ப்பிக்கலாம். இந் யர்களுக்கு விசா கட்டணம் குறைக் ப்பட்டுள்ளது. இந்தியர்கள் விண் ணப்பிக்கும் விசாக்கள் தற்போது மிக விரைவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

அமெரிக்கா - சீனா இடையே வர்த்தகப் போர் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகள் மீது பரஸ்பர வரியை விதித்தார். பின்னர் சீனாவை தவிர மற்ற நாடுகளுக்கு 90 நாட்கள் வரிவிலக்கு அறிவித்தார். அதேவேளையில் சீனாவுக்கான வரியை 145 சதவீதமாக உயர்த்தினார். இதற்கு பதிலடியாக சீனாவும் அமெரிக்கா மீதான வரியை உயர்த்தியது.

இதனால் இரு நாடுகள் இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியாவுக்கு சீனா விசா சலுகைகளை அறிவித்துள்ளது.

இது இந்தியா-சீனா இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக கருதப்படுகிறது. வரி விதிப்பு நடவடிக்கையில் அமெரிக்காவுக்கு எதிராக போராட இந்தியாவுக்கு சீனா அழைப்பு விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

## கலைக்கப்பட்டது சிங்கப்பூர் பாராளுமன்றம்




(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் பாராளுமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலைக்கப்பட்டதாக சிங்கப்பூர் அரச வர்த்தமானி அறிவித்துள்ளது.

சிங்கப்பூரின் பொதுத் தேர்தல் எதிர்வரும் மே மாதம் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளதை கருத்தில் கொண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள தேர்தல், சிங்கப்பூரின் சுதந்திரத்திற்கு பின்னர் நடைபெறவுள்ள 14 ஆவது பொதுத் தேர்தல் ஆகும்.

இந்நிலையில் ஏப்ரல் 23 ஆம் திகதி வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரின் பிரதமர் லோரன்ஸ் வோங்கு இம்முறை முதல் தடவையாகப் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஈரான் மீது தாக்குதல் நடத்த திட்டமிடும் அமெரிக்கா?

(வோஷிங்டன்)

"ஈரான் சிறந்த நாடாக இருக்கலாம் அதனிடம் அணுஆயுதம் இல்லாத வரை. அவர்களிடம் அணு ஆயுதம் இருந்தால் சிறந்த நாடாக இருக்க முடியாது. அவர்களுக்கு அதற்கான வாய்ப்பு கிடைக்காது." என்று வோஷிங்டனில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"நீங்கள் ஈரான் பற்றிய ஒரு முடிவை விரைவாக எடுப்பதாகக் கூறினீர்கள். அதன் பொருள் என்ன? ஈரானை தாக்கும் முடிவு ஏதேனும் உள்ளதா?" என நிருபர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், பிரச்சினையை விரைவாகத் தீர்க்க வேண்டுமா? நம்முடன் ஒப்பந்தத்தில் ஈடுபட ஈரான் விரும்புகிறது. ஆனால், அது எப்படிச் செய்வதென அவர்களுக்கு தெரியவில்லை. உண்மையாகவே அவர்களுக்கு அது தெரியவில்லை.

கடந்த சனிக்கிழமை ஈரானுடன் ஒரு பேச்சுவார்த்தை நடந்தது. மற்றொரு பேச்சுவார்த்தை வரும் சனிக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கால இடைவெளி மிக நீண்டதாக உள்ளது. எனவே அவர்கள் நம் நேரத்தை வீணடிப்பதை போலத் தோன்றுகிறது.

ஈரான் அணுஆயுதம் என்ற கருத்தை முற்றிலுமாக கைவிட வேண்டும். அவர்கள் அணுஆயுதம் வைத்திருக்க முடியாது. நாமும் அணுஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது.

மிகவும் எளிமையான விடயம். அது மிகவும் எளிதானது. அவர்கள் வேகமாகச் செயற்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் அணுஆயுதம் தயாரிப்பின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறார்கள். ஆனால், ஈரானால் அதை அடைய முடியாது. கடுமையாகச் செயற்பட வேண்டியிருந்தால், அதை நிச்சயம் செய்வேன். அதை நம் நலனுக்காக இல்லாமல், உலக நலனுக்காகச் செய்வேன்." என அவர் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி கைப்பற்றுமாக இருந்தால் மன்னாரை யாராலும் காப்பாற்ற முடியாது

### செல்வம் எம்.பி

(மன்னார்)

உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பிஅரசு முழுமையாக கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும் என தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் தலைவரும் வன்னி மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டு இருக்கின்ற நிலையில் வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு போட்டியிடுகின்றது. சில சபைகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றத்தை நாடி, தற்போது வெற்றி பெற்றுள்ளோம்.

இனி வருகின்ற காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாது விட்டால் எமது பிரதேசங்களில் பிளவுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தும். தேசியத்தை இல்லாது செய்யும் நடவடிக்கையையும் ஏற்படுத்தும்.

எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நாங்கள் நிர்ணயம் செய்கின்ற சக்தியாக தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கின்ற வாய்ப்புகளை உருவாக்குவோம்.

குறிப்பாக மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் உற்பத்தி பிரதான விடயமாக பார்க்கப்படுகின்றது. மன்னார் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் தற்போது மன்னாரிற்கு பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் வருகை என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் குறித்த இரு திட்டங்களையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான சந்தர்ப்பமாக அமையும்.

உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக்கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தை காப்பாற்ற முடியாத ஒரு சூழலை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார். (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 350 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 500 | 500 | 450 | 600 |
| தக்காளி | 550 | 550 | 700 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 250 | 300 | 200 |
| கோவா | 400 | 350 | 350 | 300 | 350 |
| கரட் | 600 | 750 | 700 | 600 | 600 |
| பூசணி | 220 | 220 | 250 | 200 | 200 |
| புடோல் | 150 | 250 | 200 | 230 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 250 | 150-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 160 | 150 | 150 |
| பாகற்காய் | 450 | 500 | 600 | 450 | 500 |
| வெண்டக்காய் | 250 | 350 | 200 | 300 | 500 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 250 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 160 | 150 | 150-250 | 300 |
| லீக்ஸ் | 350 | 400 | 250 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 350 | 200 | 400 | 500 |
| கறிமிளகாய் | 600 | 500 | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | 3000 | 1600 | 2500 | 2500 |
| போஞ்சி | 400 | 650 | 500 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 260 | 150 | 150-200 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 600 | 500 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 400 | - | 600 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | 250 |


## INVITATION FOR BID 2025/ 01
## DELFT PRADESHIYA SABHA NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee,** on behalf of the Delft Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-04-17 To 2025-04-30 during 09:00 hrs and 14:00 Hrs.**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, **Delft Pradeshiya Sabha (T.P:0212215211, e.mail: tsecretarydelft@yahoo.com) from 9:00 hrs to 14:00 Hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Delft Pradeshiya Sabha on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below.**
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | from 2025-04-17 To 2025-04-30 | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-04-23 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.30 P.M on 2025-04-30 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(7)/2/PSDG/2025/01 | Renovation of Thoongalai Road (Stage-II) | 4.23 | 84 | C8 or Above (Highway) | 3000.00 | 43000.00 | 17.07.2025 | 18.06.2025 |
| NP/14/41(7)/2/PSDG/2025/02 | Extension Work of Plastic Compaction Center at Delft | 1.69 | 60 | C9 or Above (Building) | 3000.00 | 17000.00 | 17.07.2025 | 18.06.2025 |

Chairman,Local Authority Procurement Committee,
Delft Pradeshiya Sabha.

(C-2724) 17-04-2025


## தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் சதி

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் சமந்த வித்தியாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்கு நாட்டை மேம்படுத்தும் திட்டங்களை நிறைவேற்ற கால அவகாசம் கிடைத்தால், எதிர்க் கட்சியினருக்கு எதிர்காலம் இல்லையென்பதை உணர்ந்து, அவர்களே இப்போது அரசை கவிழ்க்க கும்பலாக சதித் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், எதிர்க்கட்சியினர் இரண்டு விடயங்களுக்காக அரசாங்கத்தின் மீது அச்சம் கொண்டுள்ளனர். இந்த அரசு நாட்டை எட்டி உயர்த்தும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

இந்த அரசாங்கத்துக்கு கால அவகாசம் கொடுத்தால், நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும், அதன் பிறகு மக்கள் எதிர்க்கட்சியினரை மீண்டும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அதனால் முன்னதாகவே அரசை வீழ்த்தி தடுப்பதே அவர்களின் இலக்கு எனவும் அவர் தெரிவித்தார். (நி-8)

## வரி தொடர்பிலான பேச்சு; அமெரிக்கா செல்லும் குழு

(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கைக்கு விதிக்கப்படும் பரஸ்பர வரிகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கையின் பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்காவிற்குச் செல்லவுள்ளது.

இதன்படி குறித்த குழு அடுத்த வாரம் அமெரிக்காவிற்குச் செல்லவுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு அமெரிக்கா பாரியளவில் சுங்கவரி விதித்துள்ளது.

இந்த வரி விதிப்பு இலங்கையின் ஆடைக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை- வேலணை
# வேலணை வங்களாவடிச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2025

வேலணை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 17.04.2025 தொடக்கம் 02.05.2025 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி :-02.05.2025 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 01.00 மணிவரை

கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 02.05.2025 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 02.00 மணி

கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் இடம்:- சபா மண்டபம், தலைமை அலுவலகம்.

| விபரம் | ஆகக் குறைந்த அடிப்படைக் கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| வங்களாவடிச் சந்தி,வேலணை | | | | |
| கடை இல 8 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 9 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 10 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 11 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 12 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 13 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |

1. கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை செயலாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடிச் சந்தி, வேலணை எனும் முகவரிக்கு 02.05.2025 ஆம் திகதி பிற்பகல் 01.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் குறித்த காலப் பகுதிக்குள் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், "பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

2. கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிரா கரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.

4. ஆகக் குறைந்த அடிப்படை கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக் கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப் படமாட்டாது.

5. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு அவற்றில் சித்தி பெற்ற ஒரு கடை மட்டுமே வழங்கப்படும் அவ்வாறு வழங்கப்படும் ஒரு கடையும் அவரால் கோரப்பட்ட ஆகக் கூடுதலான கேள்வித் தொகை கொண்ட கடை மட்டுமே வழங்கப்படும். இவ் நிபந்த னையை மீறும் பட்சத்தில் அவரது அனைத்து விண் ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு கேள்வி பெறுவதற்கு தகுதி அற்ற நபராக கணிக்கப்பட்டு இது தொடர்பான வைப்புத் தொகை எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.

6. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.

7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

8. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.

9. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப் படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்ற வரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு உரிய அனுமதியினைப் பெற்று நடாத்த அனுமதிக்கப்படுவர்.

10. கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் எழுத்து மூல அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

11. சித்திபெற்ற கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும். என்பதோடு சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்பு பணமானது கேள்விச் சபைத் தீர்மானத்தின் பின்னர் மீளளிக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய திறப்புப் பணத்தினை (Key Money) முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத் தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

13. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்ட திறப்புப் பணத் தொகை (Key Money) எச் சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.

14. பெற்றுக் கொள்ளும் கடையில் ஏற்படும் இயற்கை அனர்த்தம் தவிர்ந்த பாதிப்புகளுக்கு வாடகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.

15. கடைகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தினை நிலுவைகளின்றி இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் தாங்களே செலுத்துதல் வேண்டும்.

16. திண்ம மற்றும் திரவ கழிவுகள் தொடர்பில் சபையின் நடைமுறைகளைப் பின்பற்றி உரிய முறையில் அவற்றினை அகற்றுதல் வேண்டும்.

17. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீ கரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபான வகைகளோ, அருவருப்பான பொருட்களோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது அல்லது வைத்தி ருத்தல் தடை செய்யப்படுவதுடன் ,கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.

18. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் வாடகைத் தொகை யின் 10 வீதத்தினை தண்டப் பணமாக சேர்த்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.

19. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/தகவல்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் வேலணை உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

20. மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

குறிப்பு :- வேலணை பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டுமே கேள்வி கோரலில் பங்குபற்ற முடியும். (விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் போது கிராம சேவை உத்தியோகத்தரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் ஆள் அடையாளத் தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றுடன் வருகை தருதல் வேண்டும் )

**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை,**
**வேலணை.**
(கி-2721)
17.04.2025

## பிள்ளையானைத் தொடர்ந்து பலர் கைது செய்யப்பட உள்ளனர்
### பிரதி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பிள்ளையானைத் தொடர்ந்து பலர் கைது செய்யப்பட உள்ளதாக பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குற்றச்செயல்களில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட உள்ளதாகவும் இவ்வாறானவர்கள் தொடர் பிலான நீண்ட பட்டியலொன்று காணப்படு வதாகத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு சிறைக்குச் செல்லும் எவரும் தாம் குற்றம் இழைத்து விட்டதாக கூறுவதில்லை. தான் திருடியதாகவோ அல்லது கொள்ளையடித்ததாகவோ எவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

கைது செய்யப்படும் நபர்கள் அரசியல் பழிவாங்கல் என தங்களது குற்றங்களை நியாயப்படுத்தி வருவதாகவும் நீதிபதியின் முன்னிலையில் இவ்வாறு அரசியல் பழிவாங்கல் என கூறமுடியாது எனவும் தெரிவித்துள்ளதால் மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப்பட்டதன் பின்னர் இவ்வாறு பழி சுமத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

## உலக அமைதி மாநாட்டில் மைத்திரி பங்கேற்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 14 ஆம் திகதி திங்கட் கிழமை வரை தென் கொரியா வின் சியோல் நகரில் நடைபெற்ற உலக அமைதி மாநாடு 2025 இல் கலந்துகொண்டார்.

உலக அமைதி மாநாட்டின் சர்வதேச அமைதி மாநாட்டு சபையின் ஆசிய பசுபிக் பிராந்தியத் தலைவராக பதவி வகிக்கும் மைத்திரிபால சிறிசேன இம் மாநாட்டின் ஆரம்ப அமர்வில் சிறப்பு சொற்பொழிவொன்றை ஆற்றினார்.

இதன்போது உலகளாவிய அரசியல் ஸ்திரத் தன்மை, அமைதி, காலநிலை மாற்றம், மதம் மற்றும் அரசியல் துறைகளை இணைக்கும் உல களாவிய அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அரச தலைவர்கள், பேச்சாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட சுமார் 40 நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள், அறிஞர்கள் மற்றும் நிபுணர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். (நி-8)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேசசபைகளுக்கான வாக்காளர் அட்டைகள் கையளிப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளுக்குமான வாக்காளர் அட்டைகள் அஞ்சல் திணைக்களத்திடம் நேற்று கையளிக்கப்பட்டது.

மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் வைத்து மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வே.சிவராசா மாவட்ட பிரதான அஞ்சல் அலுவலக உத்தியோகத்தரிடம் கையளித்தார். 2025 உள்ளூராட்சி சபை தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 102387 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இன்று முதல் வாக்காளர் அட்டை வாக்கா ளர்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெ டுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

750





உனக்குப் பெண் கொடுப்பதற்கு இந்தப் பாரத தேசத்தில் மன்னர்கள் பலர் காத்திருக்கிறார்கள். இந்தச் சம்புவரையன் மகள் தான் வேண்டுமென்பதில்லை. இராஜ்யத்தை உனக்குப் பாதி என்றும் மதுராந்தகனுக்குப் பாதி என்றும் பிரித்துக் கொடுத்துச் சமாதானம் செய்விக்கப் போகிறார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். அதில் என்ன சூது இருக்குமோ, சூழ்ச்சி இருக்குமோ, எனக்குத் தெரியாது. எது எப்படியானாலும், நான் உடனே திருக்கோவலூருக்குச் சென்று என்னுடைய பாதுகாப்புப் படைகளையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து வெள்ளாற்றங்கரையில் தங்கியிருப்பேன். சம்புவரையர் அரண்மனையில் இருக்கும்போது உனக்கு ஏதேனும் சந்தேகம் தோன்றினால் எனக்கு உடனே சொல்லி அனுப்பு!"

இச்சமயம் ஆதித்த கரிகாலனுடைய கவனம் தன் பக்கம் இல்லை என்பதையும் வேறு பக்கம் திரும்பியிருக்கிறதென்பதையும் மலையமான் கண்டார்.

"தாத்தா! அதோ பாருங்கள்!" என்று ஆதித்த கரிகாலன் கலக்கத்துடன் கூறிய வார்த்தைகளை அந்த வீரக் கிழவர் கேட்டு, அந்தத் திசையை உற்று நோக்கினார்.

### 3 ஆம் அத்தியாயம்
### பருந்தும், புறாவும்

ஆதித்த கரிகாலன் சுட்டிக்காட்டிய திசையில் ஆற்றங்கரை மண்டபம் ஒன்று இருந்தது. அது கல் வேலையினால் ஆன மண்டபம். வழிப்போக்கர்கள் வெய்யிலிலும் மழையிலும் தங்குவதற்காக யாரோ தர்மவான் அதைக் கட்டியிருக்க வேண்டும். அந்த மண்டபம் வெய்யிலிலும் மழையிலும் வெகு காலம் அடிபட்டு முதுமையின் அறிகுறிகளை காட்டிக் கொண்டிருந்தது. மண்டபத்தின் முனைகளில் சிற்ப வேலைப்பாடு உடைய உருவங்கள் சில காணப்பட்டன. அவை இன்னவை என்று கிழவராகிய மலையமானுக்குத் தெரியவில்லை. "பார்த்தீர்களா, தாத்தா!" என்றான் ஆதித்த கரிகாலன்.


"குழந்தாய்! அந்த மண்டபத்தைத்தானே சொல்லுகிறாய்? அதில் வேறு ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே? மண்டபமும் வெறுமையாகத்தான் இருக்கிறது, அதில் யாரும் இருப்பதாகக் காணவில்லையே!" என்றார்.

"தாத்தா! உங்களுக்கு வயதாகிவிட்டது என்று இப்போது தான் எனக்கு நன்றாய்த் தெரிகிறது. அதனால் கண் பார்வை குன்றியிருக்கிறது. அதோ பாருங்கள்! ஒரு பெரிய இராஜாளி! எத்தனை பெரியது? அதன் சிறகுகள் எவ்வளவு விசாலம்? கொடுமை! கொடுமை! அது தன் கால்களில் ஒரு சின்னஞ்சிறு புறாவைப் பிடித்துக் கொண்டிருக்கிறதே தெரியவில்லையா? இராஜாளியின் கூரிய நகங்கள் கிழித்துப் புறாவின் இரத்தம் சிந்துகிறதே, தெரியவில்லையா? கடவுளே, இது என்ன விந்தை! அதோ இன்னொரு புறாவைப் பாருங்கள், தாத்தா! அந்தப் பயங்கரமான இராஜாளியின் அருகில் வட்டமிடுகிறது! அது இராஜாளியிடம் எப்படிக் கெஞ்சுகிறது? இராஜாளியின் கால்களில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் புறா அதனுடைய காதலனாக இருக்க வேண்டும்! காதலனுக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கும்படி அது கெஞ்சுகிறது! தாத்தா! அந்தப் புறா கெஞ்சுகிறதா? அல்லது இராஜாளியிடம் சண்டைக்குப் போகிறதா? (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மைனாவும் அதன் குஞ்சுகளும்



ஒரு ஊரில் ஒரு பெரிய கோதுமை வயல் இருந்தது. அந்தக் கோதுமை வயலுக்கு நடுவிலே ஒரு மைனா கூடுகட்டி குஞ்சு பொரிச்சிருந்தது.

அந்தக் குஞ்சுகள் மிகவும் சிறியதாக இருந்ததால் அவற்றினால் பறக்க முடியவில்லை. அம்மா மைனா கொடுக்கின்ற சாப்பாட்டை மட்டும் சாப்பிட்டு உயிர்வாழ்ந்து கொண்டு இருந்தன.

ஒருநாள் அந்தக் கோதுமை வயலினுடைய முதலாளி அங்கு வந்தார். கோதுமைகள் எல்லாம் நன்றாக வளர்ந்து விட்டது. உதவிக்கு யாராவது கிடைத்தால் நாளைக்கே அறுவடை செய்து விடலாம் என்று சொன்னார்.

அதைக் கேட்ட மைனாக் குஞ்சுகள் மிகவும் பயந்து போய் விட்டன. அடடா கோதுமையை அறுவடை செய்தால் எங்கள் கூட்டையும் பிரித்துப் போட்டுவிடுவார்கள். நமக்கு ஆபத்து என்று சொல்லின. அதைக் கேட்ட அம்மா மைனா பயப்படாதீர்கள். நாளைக்கு அறுவடை செய்ய மாட்டார்கள் என்று சொல்லியது.

அதுமாதிரியே மறுநாள் அந்த விவசாயி அறுவடை செய்யவே இல்லை. சிறிது நாட்களுக்குப்பின் அங்கு வந்த விவசாயி பக்கத்து ஊரில் இருந்து வேலைக்கு ஆட்களை வரவைத்து நாளைக்கு அறுவடை செய்யலாம் என்று சொன்னார். அதைக் கேட்ட மைனாக் குஞ்சுகள் திரும்பவும் பயந்து போய்விட்டன. அவர்களின் அம்மாவிடம் நாம் வேறு எங்கேயாவது போய்விடலாம் என்று கேட்டன. அதற்கு அந்த அம்மா மைனா சொல்லியது. ஒன்றும் பயம் இல்லை நாளைக்கும் அறுவடை நடக்காது என்று சொல்லியது. அதே மாதிரியே மறுநாளும் அறுவடை நடக்கவில்லை. சிறிது நாட்களுக்குப் பின் அங்கு வந்த விவசாயி ரொம்ப காலம் தாழ்த்த கூடாது அதனால் நானே அறுவடையை செய்து விடப் போகின்றேன் என்று சொன்னார்.

அதைக் கேட்ட அம்மா மைனா சொல்லியது. ஆபத்து குழந்தைகளா யாரையும் நம்பாமல் தன்னுடைய வேலையைத் தானே செய்ய அந்த விவசாயி முடிவெடுத்து விட்டார்.

அதனால் எல்லாரும் மெதுவா என்னோடு நடந்து வாருங்கள் என்று சொல்லி அந்த கூட்டை விட்டு பக்கத்தில் இருக்கும் புதருக்குள் பாதுகாப்பாக எல்லாக் குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு போனது அந்த மைனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் ஒவ்வொருவரிடமும் நல்லவைகளைக் காண்பதே இனிமையான தன்மையாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறுங்கள்

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது புதிய அரசியலமைப்பின் மூலம் எட்டப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் உறுதிபடத் தெரிவித்து வருகிறது.

புதிய அரசியலமைப்பு மலரும். தமிழ் மக்களுக்குத் தீர்வு கிட்டும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அண்மையில் தெரிவித்திருந்தார்.

தவிர, இதே உத்தரவாதத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி ஆகியோரும் கூறிவருகின்றனர்.

இஃது ஒருபுறமிருக்க, புதிய அரசியலமைப்பு வருவதற்கு முன்னதாகத் தீர்க்கப்பட வேண்டிய தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் நிறையவே உண்டு.

அதில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கக்கூடிய நிலங்களை விடுவித்தல், போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள வீதிகளைத் திறந்துவிடுதல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் எனப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன.

இதில் கடந்த 35 வருடங்களாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்பட்டிருந்த, வயாவிளானுக்கு அப்பாற்பட்ட பலாலி வீதி பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது.

குறித்த வீதி கடும் நிபந்தனைகளுடன் திறந்து விடப்பட்டாலும் கடந்த கால அரசாங்கங்கள் செய்யாமல் தவிர்த்து வந்ததை அநுர அரசாங்கம் நிபந்தனைகளுடனாவது திறந்து விட்டமையை வரவேற்றுத்தானாக வேண்டும்.

அதேவேளை இன்று (17) ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரத்தின் பொருட்டு அவர் வருவதாக இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், நாம் அவரிடம் எடுத்துக் கூறவேண்டிய விடயங்களை முன்னிலைப்படுத்துவது அவசியம்.

அந்த வகையில், யாழ்ப்பாணம் கொட்டடி மீனாட்சிபுரத்தில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான ஒன்றரை ஏக்கர் நிலத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

கடந்த 20 வருடங்களாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய யாழ்.போதனா வைத்தியசாலைக்குரித்தான காணியை யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளிப்பதற்கு ஜனாதிபதி அநுர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோன்று யாழ்ப்பாணம் கீரிமலையிலுள்ள சடையம்மா மடம், ஆதிசிவன் ஆலயம் அமைந்த இடம், காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல் அமைந்துள்ள சுக்கிரவார சத்திரமடத்து நிலம் உட்பட படையினரின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கக்கூடிய பொதுமக்களின் காணிகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

இதுபற்றி ஜனாதிபதியிடம் ஆளுந்தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் எடுத்துக் கூறி, எமது மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

இதுவிடயத்தில் எந்தவித தாமதங்களுக்கும் இடம் வைக்காமல் உடனடியாக நில விடுவிப்புக்கு ஜனாதிபதி அநுர உத்தரவிட வேண்டும் என்பது தமிழ் மக்களின் கோரிக்கையாகும்.

### போர்க் குற்றங்களுக்குப் பயணத்தடை போதாது

# இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும்

## அழைப்பு விடுத்தார் பிரிட்டன் எம்.பி உமாகுமரன்

*(லண்டன்)*

முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு உரிய தீர்ப்பு கிட்ட வேண்டும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் தெரிவித்துள்ளார்.

தனது தமிழ்ப் புது வருட வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்ப் பாரம்பரியத்தின் முதலாவது பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், எனது முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக, இலங்கையில் போர்க்குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டவர்களிற்கு எதிராகத் தடைகளை விதிக்க வேண்டும் என நான் அழைப்பு விடுத்தேன்.

அன்றிலிருந்து இந்த விடயம் தொடர்பில் செயற்படுவதை நான் நிறுத்தவில்லை. 15 வருடங்களிற்குப் பின்னர் தொழில்கட்சி இது குறித்து நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட அட்டூழியங்களிற்கு காரணமான இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகளிற்கு எதிராக மார்ச் மாதம் பிரிட்டிஸ் அரசாங்கம் தடைகளை விதித்தது.

இது நீதிக்கான நீண்டகாலமாகக் காத்திருந்த பல குடும்பங்களிற்கு மிக முக்கியமானதொரு தருணம். ஆனால் நீதி என்பது ஒரு முறை மாத்திரம் நடக்கும் நிகழ்வல்ல. நாம் தொடர்ந்து செயற்பட வேண்டும்.

ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரைக்கு ஏற்ப இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என நான் அழைப்பு விடுக்கின்றேன்.

மே 2009 கொடூரங்களை நாங்கள் நினைவில் கொள்கின்றோம். நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். நாங்கள் தொடர்ந்தும் பதில்களை தேடுவதை நிறுத்தக் கூடாது என்று பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் தெரிவித்துள்ளார். *(ம-4,7)*

## மக்கள் சுதந்திரமாக சுயசிந்தையுடன் வாக்களிக்க ஜனாதிபதியே முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது

### அநுரவின் தேர்தல் பரப்புரைகள் குறித்து சஜித் அதிருப்தி

*(நீர்கொழும்பு)*

ஓர் ஜனநாயக நாட்டில் மக்கள் சுதந்திரமான முறையில் தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதனைத்தடுப்பது தேர்தல் விதிமீறல் என்பதுடன் மனிதவுரிமை மீறலாக அமையும். தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்தால் மாத்திரமே அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும் என்று நாட்டின் ஜனாதிபதியே குறிப்பிடுவது அவரது பதவிக்கு அழகல்ல என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஜனாதிபதி நியமிக்கப்படுகின்றார். அவ்வாறு இல்லாது ஜே.வி.பிக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படவில்லை. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எதற்கும் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. சமூகக் கட்டமைப்பில் காணப்படும் எந்தப் பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை.

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலத்தை வழங்கினார்கள். எதிர்க்கட்சிகளை முடக்குவதற்காகவே இந்த அரசாங்கமும் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்துகிறது. ஏன் பெரும்பான்மை பலத்தை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பயன்படுத்தக்கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கேள்வியெழுப்பினார். *(ம-4,7)*

## குஷ் ரகப்போதைவஸ்துடன் அமெரிக்கப் பிரஜை கைது

*(கட்டுநாயக்க)*

23 கோடி ரூபா பெறுமதியான குஷ்ரகப்போதைப்பொருளுடன் அமெரிக்கப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதுடைய குறித்த அமெரிக்கப் பிரஜை தாய்லாந்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபரான அமெரிக்கப்பிரஜை கொண்டு வந்த பயணப்பொதியிலிருந்து 23 கிலோகிராம் குஷ் ரகப் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை விமான நிலையப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றதுடன் விசாரணைகளின் பின் குறித்த அமெரிக்கப் பிரஜை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸாரிடம் பாரப்படுத்தப்படவுள்ளார். *(ம-4,7)*

## அரசாங்கத்தைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் சதித்திட்டம்

### அமைச்சர் சமந்த பகிரங்க குற்றச்சாட்டு

*(கொழும்பு)*

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் சதித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் சமந்த வித்தியாரட்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்கு நாட்டை மேம்படுத்தும் திட்டங்களை நிறைவேற்ற அவகாசம் கிடைத்தால், எதிர்க்கட்சியினருக்கு எதிர்காலம் இல்லையென்பதை உணர்ந்து அவர்களே இப்போது அரசைக் கவிழ்க்க கும்பலாக சதித் திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் எதிர்க்கட்சியினர் இரண்டு விடயங்களுக்காக அரசாங்கத்தின் மீது அச்சம் கொண்டுள்ளனர். தே.ம.சக்தி அரசாங்கம் நாட்டை எட்டி உயர்த்தும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

இந்த அரசாங்கத்துக்குக் கால அவகாசம் கொடுத்தால் நாட்டைச் சரியான பாதையில் கொண்டு செல்லும், அதன் பிறகு மக்கள் எதிர்க்கட்சியினரை மீண்டும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

அதனால் முன்னதாகவே அரசாங்கத்தை வீழ்த்தி நாட்டின் வளர்ச்சியை தடுப்பதே அவர்களின் இலக்கு எனவும் தெரிவித்தார். *(ம-4,7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்

## நடத்தையில் தெளிவும் சிந்தனையில் நிதானமும் கொண்ட மிதுன இராசி நேயர்களே!



**கிரகநிலை-** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய் - சுக ஸ்தானத்தில் கேது - பஞ்சம ஸ்தானத்தில் சந்திரன் - பாக்கிய ஸ்தானத்தில் சனி - தொழில் ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - லாப ஸ்தானத்தில் சூரியன் - அயன சயன போக ஸ்தானத்தில் குரு என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-04-2025 அன்று கேது பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார். 06-03-2026 அன்று சனி பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11-05-2025 அன்று குரு பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 08-10-2025 அன்று குரு பகவான் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம். 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி.

**பலன்கள்:** நடத்தையில் தெளிவும் சிந்தனையில் நிதானமும் கொண்ட மிதுன ராசி நேயர்களே! ஆன்மிகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். செய் தொழிலில் மேன்மை உண்டாகும். சிக்கலான வழக்குகளில் இருந்தவர்களுக்கு திடீரென்று அனுகூலமான விடுதலை கிடைக்கும்.

எடுத்த அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கூடும். ஆதரவற்றோர்களுக்கும் நலிந்தோருக்கும் அடைக்கலம் கொடுத்து ஆதரவளிப்பீர்கள். சமுதாயத்தில் உயர்ந்தோருடன் அறிமுகமாவீர்கள். உங்களின் காரியங்கள் இடையூறின்றி நிறைவேறும். எதிர்பார்த்த, எதிர்பாராத அதிஷ்ட வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். சிலர் புதிய வீடு கட்டி கிரகப்பிரவேசமும் செய்வார்கள்.

பெற்றோர் வழியிலிருந்து நன்மைகள் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்களில் சுமுகமான பாகப் பிரிவுகளும் உண்டாகும். குடும்பப் பாரம்பரியத்தைக் காப்பாற்றுவீர்கள். உங்கள் நன்னடத்தையால் அனைவரையும் கவருவீர்கள்.

பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும். உதவி என்று வருபவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வீர்கள். நண்பர்களுக்குள் இருக்கும் சண்டைச் சச்சரவுகளைத் தீர்த்து வைப்பீர்கள். மற்றபடி உழைப்பிற்கு ஏற்ற வருமானம் உடனுக்குடன் கிடைக்கும்.

உங்கள் உலக அறிவு, அனுபவம் பலருக்கும் பயன்படும். தீயோரைமன்னிப்பீர்கள். மேலும் அவர்களிடமிருந்து விலகி விடுவீர்கள். கொடுத்தவாக்கைக் காப்பாற்றுவீர்கள். பணவரவு சிறிது குறைவாக இருந்தாலும் குடும்பத் தேவைகளுக்காக செலவு செய்ய தயங்கமாட்டீர்கள். மேலும் கடன் தொல்லைகள் ஏற்படாது. உடன்பிறந்தோர் உங்களால் பயனடைவார்கள்.

நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். ஒழுக்கத்துடன் நடந்து கொண்டு சமுதாயத்தில் உங்கள் செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள். புத்திசாலித்தனத்தால் செயற்கரிய சாதனைகளைச் செய்வீர்கள். துணிந்து செய்யும் காரியங்கள் அனைத்தும் இலாபகரமாகவே முடிவடையும் கால கட்டமிது என்றால் மிகையாகாது.

**உத்தியோகஸ்தர்கள்:** அலுவலகப் பணிகளில் மாற்றங்களைக் காண்பார்கள். திட்டமிட்ட காரியங்கள் அனைத்தையும் கவனத்துடன் செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் மனமறிந்து செயலாற்றுவர். வருமானத்திற்கு எந்தக் குறையும் வராது. பயணங்களால் நன்மை கிடைக்கும். மேலதிகாரிகளிடமிருந்து எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். விரும்பிய இடமாற்றங்களையும் பெறுவீர்கள்.




**வியாபாரிகள்:** புதிய யுக்திகள் புகுத்தி வருமானத்தைப் பெருக்க முனைவர். போட்டி பொறாமைகள் சற்று தலை தூக்கும். பொருட்களின் விற்பனை நல்ல முறையில் நடக்கும். புதிய முதலீடுகளில் கவனத்துடன் ஈடுபடுவீர்கள். கூட்டாளிகளுடன் கலந்தாலோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். அரசாங்கத்திலிருந்தும் சலுகைகள் கிடைக்கும்.

**அரசியல்வாதிகள்:** முக்கிய மானவர்களின் நட்பு கிடைக்கும். சமூகத்தில் உங்கள் மதிப்பு மரியாதை உயரும். முக்கியஸ்தர் என்று பெயரெடுப்பீர்கள். கட்சிப் பணிகளில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். கட்சியில் முக்கிய பொறுப்புகளையும் ஏற்பீர்கள். நண்பர்களாலும் தொண்டர்களாலும் ஏற்றம் பெறுவீர்கள்.

**கலைத்துறையினர்:** புதிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும். சக கலைஞர்களே உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பர். மேலும் பயணங்களால் நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. புதிய வண்டி வாகனங்களை வாங்குவீர்கள்.

**பெண்கள்:** கணவரிடம் அன்பு, பாசம் அதிகரிக்கும். உற்றார் உறவினர்களிடம் அன்பாகப் பழகுவீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுப காரியங்களை நடத்தி மகிழ்வீர்கள். வருமானம் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்கு இருக்கும். குழந்தைகளால் சந்தோஷங்கள் நிறையும்.

**மாணவர்கள்:** படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். ஆசிரியர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். பெற்றோர்களிடம் விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளவும்.

**மிருகசீரிஷம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு நீண்ட முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். ஆனால் பொருளாதார ரீதியாக சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்கும். எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்குவாதம் ஏற்படலாம்.

**திருவாதிரை:** இந்த ஆண்டு பிற்பாதி மிகவும் சிறப்பாக இருக்கிறது. வேலையில் தீவிர அக்கறை எடுக்க வேண்டும். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்து போக வேண்டியிருக்கும்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு உடல்நலத்தைப் பொறுத்தவரையில் பித்தம், மயக்கம் தொடர்பான பிரச்சினைகள் வரலாம். மருத்துவச் செலவு வெகுவாகக் குறையும். மனதில் பட்டதை பளிச் சென்று சொல்வீர்கள்.

**பரிகாரம்:** புதன்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் ஆலயங்களுக்கு செல்லுங்கள். முடிந்தவர்கள் திவ்ய தேசங்களுக்கும் செல்லலாம். செல்வங்கள் குவியும்.

ஓம் ஹரி ப்ரும்ஹ வாசினே நமஹ - என்ற மந்திரத்தை தினமும் 27 முறை சொல்லவும். கிழக்கு வடக்கு ஆகிய திசைகள் அதிஷ்டம் தரும். சந்திரன் - புதன் - குருவினால் எதை ஆரம்பித்தாலும் நன்மைகளைப் பெறுவீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களின்...

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்டகாலமாக சைவமக்கள் வழிபாடு செய்த புராதன இடங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளன. தாங்கள் இவற்றை விடுவிப்பதில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்போடு ஜனாதிபதியிடம் வேண்டுகிறோம்.

மேலும் பொதுமக்களின் காணிகளில் வடக்கு கிழக்கில் படையினர் தொடர்ந்து தங்கி உள்ளனர். தாங்கள் அவ்விடயத்தில் அக்கறை கொண்டு பொதுமக்களின் நிலங்களை விடுவிக்க வேண்டும். பாடல் பெற்ற தலமாகிய திருக்கோணேஸ்வரர் திருத்தலத்திற்கு அருகாமையில் பக்தர்களுக்கு இடையூறாக கோயிலுக்குச் செல்லும் பாதையில் பெட்டிக்கடைகளைஅமைத்து கோயில் புனிதத்தை தொடர்ந்து கெடுத்து வருகிறார்கள். இவ்விடயம் தொடர்பாக சென்ற வருடம் நல்லை ஆதீனத்துக்குத் தாங்கள் வருகை தந்தபோது எடுத்துரைத்தோம்.

தயவுசெய்து வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணேஸ்வர திருத்தல சுற்றாடலை பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு சைவ மக்கள் சார்பில் வேண்டுகிறோம். தாங்கள் பதவி ஏற்றதும் நீண்டகாலமாக உள்ள தமிழர் பிரச்சினையை நிரந்தரமாக தீர்த்து வைப்பேன் என கூறியிருந்தீர்கள். எனவே நிரந்தரமான பூரண உரிமைகள் உள்ளடக்கிய தீர்வை வழங்கி எம் இனத்தின் நீண்டகாலப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன்வாருங்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## இரத்தக் கறை...

கோபிதாசன் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள குளத்தின் அலைகரைப் பகுதியில் சடலம் ஒன்று உள்ளமை தொடர்பாக அப்பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்களால் உளுக்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அவர் புதுவருட தினமான கடந்த 14ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருந்ததாக அவரது குடும்பத்தினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மீட்கப்பட்ட சடலத்தில் இரத்தக் கறைகள் படிந்துள்ள நிலையில் பல்வேறு கோணங்களில் உளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,250)

## 85 கிலோ...

டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பொலிஸார் கிளிநொச்சி புளியம் பொக்கணைப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றினைச் சோதனை நடத்தினர்.

இதன்போது வாகனம் ஒன்றுக்குள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 85 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து பளையைச்சேர்ந்த இளைஞன் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,4,316)

## ஜனாதிபதி அநுர...

மாவட்டத்தில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.

யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வினால் மக்கள் சந்திப்பு ஒன்றையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,4)

## கடந்த காலங்...

இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர், இந்த நாட்டில் கம்மன்பில வழக்குகளை விசாரித்து பொதுமக்கள் இதற்கு முன்பு பார்த்ததில்லை. ஆனால் பிள்ளையான் தனது வழக்கறிஞராக கம்மன்பிலவைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

பிள்ளையானின் வழக்கையும் கம்மன்பில கையில் எடுத்துள்ளார், இவை வெறும் அரசியல் படுகொலைகள் அல்ல. இவை ஒரு பெரிய வலையமைப்பிற்குள் செயற்படுத்தப்பட்ட விடயங்களாகும். தற்போது இந்த நூல் பந்து கொஞ்சம் கொஞ்சமாக அவிழ்ந்து வருகிறது.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு இப்போது சுறுசுறுப்பாகி முன்னர் மறைக்கப்பட்ட கோப்புகளை மீட்டெடுத்து வருகிறது.

குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரப்படுகிறது. குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் வழக்குகள் மற்றும் குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்யும் பணியைத் தொடங்குகிறது.

அனைத்து சட்டத் தேவைகளும் தொடர்புடைய நிறுவனங்களால் பூர்த்தி செய்யப்படுகின்றன. அதற்கு அரசாங்கம் தேவையான வசதிகளை மட்டுமே வழங்கி வருகிறது என்றார். (ம-7,4)

## பௌத்த அடை...

அண்மையில் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதற்கு இருக்கும் ஒரே சாட்சிதான் பௌத்த சின்னங்கள்.

அதனால்தான் வடக்கிலுள்ள பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த சின்னங்களை அழித்து, அதற்கு மேல்கோயில்களை அமைத்து, அங்கு பழைய கோயில்கள் இருந்தன எனக் கூறி வருகின்றனர்.

இலங்கை என்பது பௌத்த நாடாகும். திஸ்ஸ விகாரையில் திறப்பு விழாவொன்றை நடத்த முடியவில்லை, தமிழர்கள் கூச்சலிடுகின்றனர் என்பதற்காகப் பிக்குகளுக்குத் தானம் வழங்க முடியவில்லையெனில் என்ன நியாயம்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புத்த சாசனம் பாதுகாக்கப்பட வில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

அதேவேளை, இலங்கையில் தேசிய கீதம் இரு மொழிகளில் இசைக்கப்படுகின்றது. இது பெரும் தவறாகும். அரசமைப்பை மீறும் செயலாகும்.

இந்தியாவில் எத்தனை மொழிகள் உள்ளன. ஆனால், பெங்காலி மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. அனைத்து மொழிகள் பேசபவர்களும் தேசிய கீதம் இசைக்கப்படும்போது உணர்வுபூர்வமாக இருப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## பொய் சொல்ல...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

பொத்துவில் அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை கைப்பற்றும் கட்சிகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தே உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி வழங்குவோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டிருக்கிறார். ஜனாதிபதி அவ்வாறு கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வழங்கப்படும் சேவைக்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே ஜனாதிபதி நியமிக்கப்படுகின்றார். அவ்வாறு இல்லாது ஜேவிபிக்கு மாத்திரம் சேவையாற்றுவதற்காக நியமிக்கப்படவில்லை.

ஜனாதிபதியானவர் கட்சி, சாதி, இனம், மதம் பாராமல் அனைவருக்கும் சமமான சேவையை வழங்க வேண்டும். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்த கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன். இவ்வாறான கீழ்த்தரமான அரசியல் அச்சுறுத்தல்களை கண்டு சளைக்க வேண்டாம்.

சமீபத்தில், நமது நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், பலஸ்தீன மக்கள் குறித்து அவர் கருதிய கருத்தை ஸ்ரிக்கர் ஒட்டி வெளிப்படுத்தியிருந்தார். அவ்விளைஞர் பலஸ்தீன மக்கள் சார்பாக தனது கருத்துக்களை முன்வைத்த போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைப் பிரயோகித்து கைது செய்தார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கூட பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக முன்நின்றார். ஆதரவான நிலைப்பாடுகளை எடுத்தார். பலஸ்தீன மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்ட சமயங்களில், பாரிய படுகொலைகள் இடம்பெற்ற சந்தர்ப்பங்களில், அப்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அநுர குமார திஸாநாயக்க குரல் எழுப்பினார்.

இன்று பலஸ்தீன மக்கள் சார்பாக நமது நாட்டைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் குரல் எழுப்பிய சமயத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவருக்கு எதிரான தடுப்புக் காவலில் வைக்கும் பத்திரத்தில் கையொப்பமிடும் அளவுக்கு கீழ்த்தரமாக நடந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் இரட்டைக் கொள்கைகளும் இரட்டை நாடகங்களும் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி பலஸ்தீன மக்களுக்காக நின்றது. இஸ்ரேலிய அரசும் பலஸ்தீன அரசும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

ஜே.வி.பி அரசாங்கத்திற்கு பொய் சொல்லவும் ஏமாற்றவும் மட்டுமே தெரியும். அன்று தேர்தல் மேடையில் சொன்னதை இன்று செய்ய முடியாது புலம்பிக் கொண்டிருக்கின்றனர். இன்று மக்களுக்கு வறுமையும் அசௌகரியமும் அதிகரித்துள்ளன.

இவ்வாறான நிலையில் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். இதற்கான வலுவான முறையான வேலைத் திட்டமொன்று அவசியம் முன்னெடுக்க வேண்டும் என்றார். (ம-7,4)

# தேர்தல் தொடர்பில் இதுவரை

## 168 முறைப்பாடுகள்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை (மார்ச் மாதம் 03 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி) 168 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 132 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்களும் தொடர்பில் 36 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்நிலையில் தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 18 வேட்பாளர்களும் 61 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,4)

## தேர்தல்...

வியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தபால் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளோம். எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் நிறைவடையும்.

ஏற்கெனவே தீர்மானித்ததற்கமைய எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (22), புதன்கிழமை (23) மற்றும் வியாழக்கிழமை (24) ஆகிய தினங்களில் தபால்மூல வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இந்த மூன்று தினங்களில் வாக்களிக்க தவறும் அரச உத்தியோகஸ்தர்கள் எதிர்வரும் 28 மற்றும் 29 ஆகிய இரண்டு தினங்களில் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் வாக்களிக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை அவதானிக்க முடிகிறது. தேர்தல் செலவினங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்தியுள்ளோம் என்றார். (ம-7,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
09 - 08 - 1967

உதிர்வு
15 - 04 - 2025

## இரத்தினம் பாலகுமார்

இணுவில் மேற்கு ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பாலகுமார் அவர்கள் 15.04.2025 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - லீலாவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் கௌசலாதேவியின் அன்புக் கணவரும் பாரதி, ஹரிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பபிராஜ் அவர்களின் அன்பு மாமனாரும் இராசரத்தினம், கோபாலகிருஷ்ணன்(ஈசன் - இத்தாலி), காலஞ்சென்றவர்களான உதயகுமார், அரசகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் முருகையா, மணிவண்ணன் (லண்டன்), புஸ்பலதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அக்ஷதா, அஸ்மித், பிரணவ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.04.2025 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் : குடும்பத்தினர்
077 101 7726

(C-2730)

# பிரதமர் மோடி திறந்து வைத்த விவசாய களஞ்சியசாலை செயற்படவில்லை - ஹர்ஷ டி சில்வா

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சமீபத்திய விஜயத்தின் போது திறக்கப்பட்ட தம்புள்ளையில் உள்ள வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட விவசாய களஞ்சியசாலை இன்னும் செயற்படவில்லை என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

பெயர் பலகையொன்று மாத்திரம் வைக்கப்பட்டு இந்தக் களஞ்சியசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளதே தவிர, கட்டுமானப் பணிகள் எம்மால் நிறுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளன. வேறு எந்தச் செயற்பாடுகளும் இதில் இடம்பெறவில்லை. விவசாயத்தின் போது எஞ்சியவற்றை இங்கு களஞ்சியப்படுத்த முடியாது. புதியவைகளையே களஞ்சியப்படுத்த முடியும்.

இந்தக் கட்டடத்தின் வளாகத்தின் நிலப்பரப்புக்கள் பலரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (ம-4.7)


## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2729)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.

(C-2728) 076 825 7716 (ஆகாஸ்)



## வேலையாள் தேவை
## சிவபூமி வட்டுக்கோட்டை தேவாரமடம்

சிவபூமி வட்டுக்கோட்டை தேவாரமடத்திற்கு சைவப்பற்றுள்ள பணியாளர் தேவை. ஓய்வு பெற்றவர்களும் அயற்சூழலில் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.


சிவபூமி தலைமைக் காரியாலயம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தொடர்புகளுக்கு :
021 222 7938

(C-2726)


# 34 ஆவது பிறந்த தினமும் 9 ஆம் ஆண்டு நினைவு தினமும்

## அமரர்
## தனபாலசிங்கம் வசீகரன்
(Engineer)



கண்ணுக்குள்ளே உன்னை வைத்தேன் கண்ணய்யா
நான் கண்கள் மூட மாட்டேனடா செல்லையா
நான் கண்கள் மூட மாட்டேனடா செல்லையா
நீதான் என் சந்தோஷம் பூவெல்லாம் உன்வாசம்
நீ பேசும் பேச்செல்லாம் நான் கேட்கும் சங்கீதம்
உன் புன்னகை நான் சேமிக்கின்ற செல்வமடா
நீ இல்லையென்றால் நானும் இங்கே ஏழையடா..
என் உயிருக்குள் உயிரான என் செல்வமே!
என் உலகமே நீ தான் என்றிருந்தேன்
ஏன் ஐயா இப்படி நடந்தது?
என் நினைவிலும் மறக்கமுடியவில்லையடா!
நேற்று போல் இருக்கிறது உன் நெஞ்சகலா அந்நினைவு!
நெஞ்சம் பதைக்கிறது அந்நாளை நினைக்கையிலே..
எங்கள் ஆருயிர் செல்வமே வசி – மீண்டும்
எங்களிடம் நீ வந்துவிடு!

துன்ப துயரங்களோடு
உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
பாசமிகு அம்மா...

வி.எம்.றோட்,
பருத்தித்துறை.

தோற்றம்
17.04.1991

மறைவு
15.04.2016

(C-2725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.